**DEPOSITION OF WITNESS**

IN THE COURT OF I ADDL.DISTRICT & SESSIONS JUDGE, THOOTHUKUDI.

Case No. S.C.No.301/2020.

Prosecution witness for P.W. 35.

| | | | |
|---|---|---|---|
| Name | ... **திரு. சம்பத்குமார்.** | Caste | ... |
| Father's/Husband Name | ... | Calling | ... |
| Village | ... | Religion | ... |
| Taluk | ... | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 27.01.2026.

A6 died. Others present.

<u>முதல் விசாரணை</u>

நான் தற்போது சென்னை அசோக் நகர் காவல்நிலையத்தில் பொருளாதார குற்றப்பிரிவில் துணை கண்காணிப்பாளராக பணியில் இருந்து வருகிறேன். நான் இதற்கு முன்பு 04.01.2019 அன்று ஓட்டப்பிடாரம் காவல்நிலையத்தில் ஆய்வாளராக பணியில் இருந்தபோது நிலைய குற்ற எண் 154/2019 இதச 147, 148, 341, 294(பி), 302 பிரிவுகள் படியான அ.சா.ஆ 25 வழக்கை அ.சா.34 புலன் விசாரணைக்கு எடுத்துக் கொண்டு சம்பவ இடமான வடக்கு பரும்பூரில் தண்ணீர் மேல்நிலைத் தொட்டி அருகில் சம்பவ இடத்தை பார்வையிட்டு பார்வை மற்றும் வரைபடம் தயாரித்து சில சாட்சிகளை விசாரணை செய்து வைத்திருந்த நிலையில் நான் 04.01.2019 அன்று மேற்படி காவல்நிலையத்தில் பொறுப்பேற்ற பின்னர் அ.சா.1, சாவித்ரி, சௌந்திர கோனார், அ.சா.6, அ.சா.7, அ.சா.8, அ.சா.9, அ.சா.13, அ.சா.11, பாலமுருகன், அ.சா.14 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். பிறகு 5ம் எதிரியை மதுரை – தூத்துக்குடி நெடுஞ்சாலை சந்திப்பில் ஐய்யங்கார் பேக்கரி அருகில் 04.01.2020 அன்று சாட்சிகள் அ.சா.16 மற்றும் பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் காலை 9.30 மணியளவில் கைது செய்து விசாரித்தபோது அவர் தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை அதே சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து

சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ10. 5ம் எதிரி அதன் அடிப்படையில் 5ம் எதிரி எங்களை வடக்கு பரும்பூர் தண்ணீர் மேல்நிலைத் தொட்டியின் அருகே சம்பவ இடத்தை காட்டி அரிவாள் ஒன்றை ஆஜர் செய்ததை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் நான் அ.சா.ஆ11 மகஜரில் கைப்பற்றி சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். கைப்பிடி பகுதியில் கொக்கி இருந்தது. கொம்பு பிடியுடன் இருந்த கொடுக்கு அரிவாளாகும். அது ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட சா.பொ.5. பிறகு சாட்சிகள் அ.சா.22, அ.சா.23 ஆகியோர் காயம்பட்டு தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக இருந்தவர்களை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். அ.சா.23 கொடுத்த வாக்குமூலத்தின் அடிப்படையில் நிலைய குற்ற எண் 156/2019 இதச 307 பிரிவின் படி அ.சா.33 வழக்கு பதிவு செய்திருந்தார். இந்த வழக்கின் 3ம் எதிரி கொடுத்த புகாரின் அடிப்படையில் அ.சா.33 நிலைய குற்ற எண் 155/2019 இதச 307 பிரிவின்படி வழக்கு பதிவு செய்து வைத்திருந்தார். மேற்படி இரண்டு வழக்கு சம்பவம்தான் இந்த வழக்கிற்கான முன்விரோதமாகும். பின்பு சாட்சிகள் அ.சா.17, காசிராஜன், அ.சா.24, அ.சா.31 ஆகியோரை விசாரித்து வாக்குமூலங்கள் பதிவு செய்தேன். 2ம் எதிரியை 07.01.2020 அன்று ஓட்டப்பிடாரம் பேருந்து நிலையத்தில் சாட்சிகள் அ.சா.16, பாலமுருகன் ஆகியோர் முன்னிலையில் கைது செய்து விசாரித்தபோது 2ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை மேற்படி சாட்சிகள் முன்னிலையில் பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலம் ஏற்கனவே குறியீடு செய்யப்பட்ட அ.சா.ஆ 9. அதன் அடிப்படையில் மேற்படி சம்பவ இடத்திற்கு அழைத்துச் சென்று சம்பவ இடத்தை அடையாளம் காட்டினார். 8ம் எதிரி கோவை மத்திய சிறையில் இருந்தபோது கைது வழிக்காவல் மூலம் 07.01.2020 அன்று விளாத்திகுளம் நீதித்துறை நடுவர்

முன்பாக ஆஜர் செய்து அவரை போலீஸ் காவலில் எடுத்து 17 மணியளவில் அ.சா.17, காசிராஜன் ஆகியோர் முன்னிலையில் விசாரித்தபோது 8ம் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்து சாட்சிகளிடம் கையொப்பம் பெற்றேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தின் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.சா.ஆ 29**. அதன் அடிப்படையில் பரும்பூர் வஉசி மண்டபம் பின்புறமாக எங்களை அழைத்துச் சென்று முட்புதரில் இருந்து ஆஜர் செய்த சா.பொ3 அரிவாளை மகஜரில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.சா.ஆ 30**. வழக்கு சொத்துக்களை படிவம் 91ன் மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பினேன். பிறகு இறந்துபோன மாரியப்பனின் பிரேதத்தை பிரேத பரிசோதனை செய்த மருத்துவரான அ.சா.29–ஐ விசாரித்து பிரேத பரிசோதனை பெற்று வாக்குமூலம் பதிவு செய்தேன். மேற்படி மாரியப்பனின் விபத்து பதிவேட்டு நகல் **அ.சா.ஆ 31**. நான் பணியிட மாற்றம் செய்யப்பட்டதால் வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த ஆய்வாளர் மணிவண்ணன் என்பவரிடம் ஒப்படைத்தேன். அ.சா.1, அ.சா.2, அ.சா.4, அ.சா.8, அ.சா.13, அ.சா.9 ஆகியோர் 30.01.2020–ல் விளாத்திகுளம் குற்றவியல் நீதித்துறை நடுவர் முன்பாக குவிமுச பிரிவு 164–ன் கீழ் வாக்குமூலம் கொடுத்தார்கள்.

குறுக்கு விசாரணை

அ.சா.34 ஏற்கனவே விசாரித்த சாட்சிகளை நானும் விசாரித்தேன். அ.சா.ஆ 1 புகார் சங்கதிகளுக்கும், அரசு தரப்பு வழக்கிற்கும் எந்த முரண்பாடும் எனக்கு துலங்கியதா என்றால் இல்லை. என் புலன் விசாரணைப்படி அ.சா.22ன் மனைவியான அ.சா.8, மகள்களான அ.சா.13 மற்றும் அ.சா.9 ஆகியோர் அ.சா.22–ஐ மருத்துவமனையில் சேர்க்கும்போது அவருடன் சென்றதாக என்னிடம் வாக்குமூலம் அளித்துள்ளார்கள் என்றால் சரிதான். அ.சா.22–ஐயும், அ.சா.23–ஐயும் அ.சா.33– 30.12.2019 மாலை 5.30 மணியளவில் தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் சேர்த்துள்ளதாக

அ.சா.23 மற்றும் அ.சா.22 ஆகியோரின் விபத்து பதிவேட்டு நகல்களில் சொல்லப்பட்டுள்ளது என்றால் சரிதான். என்னிடம் காட்டப்படும் ஆவணங்கள் அ.சா.22 மற்றும் அ.சா.23 ற்கு சம்பந்தப்பட்ட விபத்து பதிவேட்டு நகல்களின் சான்றிடப்பட்ட நகல்கள் என்றால் சரிதான். அவை முறையே **எ.சா.ஆ 1 மற்றும் 2**. அ.சா.33 என் விசாரணையில் அவர் அ.சா.22 மற்றும் அ.சா.23–ஐ மருத்துவமனைக்கு அழைத்துச் சென்று அனுமதித்ததாக என்னிடம் சொல்லவில்லை. மேற்படி நீதிமன்றத்தில் குவிமுச பிரிவு 164 ன் கீழ் வாக்குமூலம் அளிக்க அவர்களை யார் அழைத்துச் சென்றார்கள் என்றால் அவர்களேதான் சென்றார்கள். மேற்படி ஆறு சாட்சிகளின் வாக்குமூலத்தை நான் படித்து பார்த்தேன். அ.சா.1 என் விசாரணையில் அவர் தன் தகப்பனாரை தேடி சம்பவ இடத்திற்கு போகும்போது ஏற்கனவே சம்பவம் முடிந்துவிட்டதாக என் விசாரணையில் சொல்லவில்லை. ஆனால் அந்த விபரத்தை குவிமுச பிரிவு 164 ன் கீழ் கொடுத்த வாக்குமூலத்தில் சொல்லியிருக்கிறார். அந்த விபரத்தை நான் விளக்குவதற்காக சாட்சியிடம் விசாரணை செய்தேனா என்றால் அதைப்பொறுத்து வழக்கு கோப்பை எனக்கு பின்னால் வந்த ஆய்வாளரிடம் ஒப்படைத்துவிட்டேன். ஐந்து சாட்சிகளும் குவிமுச பிரிவு 164 ன் கீழ் கொடுத்த வாக்குமூலம் இந்த வழக்கிற்கு முரண்பாடாக உள்ளது என்றால் சரியல்ல. மேற்படி ஐந்து சாட்சிகளை நான் மீண்டும் விசாரணை செய்தபோது மேலும் மேலும் முரண்பாடுகள் வந்ததால் அந்த வாக்குமூலங்களை நான் பதிவு செய்யவில்லை என்றால் சரியல்ல. அ.சா.33 தான் மேற்படி மூன்று வழக்குகளையும் பதிவு செய்தார் என்றால் சரிதான். அதனால் அ.சா.33 மேற்படி வழக்குகளை பதிவு செய்ததாக சொல்வது தவறு என்றும், அந்த வழக்குகள் பதிவு செய்யப்பட்டதாக சொல்லப்பட்ட நேரத்தில் அ.சா.33 தூத்துக்குடி அரசு மருத்துவமனையில் இருந்திருக்கிறார் என்றும் சொன்னால் சரியல்ல. அதனால் மேற்படி மூன்று முதல் தகவல் அறிக்கைகளும் அ.சா.34 ன் மேற்பார்வையில் பின்யோசனையின்பேரில்

பின்னிட்டு தயாரிக்கப்பட்டன என்றும் சொன்னால் சரியல்ல. என் விசாரணை மேம்போக்கானது என்றால் சரியல்ல. இந்த வழக்கில் வழக்கு சொத்துக்களை தடய அறிவியல் ஆய்வகத்திற்கு நான் அனுப்பவில்லை என்றால் சரியல்ல. அ.சா.1—ன் ரத்தப்பட்ட உடைகள் இந்த வழக்கில் இருந்ததா என்பது துலங்காது என்றால் சரியல்ல. நான் சொன்ன நேரத்திலும், சொன்ன விதத்திலும் எந்த சம்பவமும் நடக்கவில்லை என்றாலும், எந்த எதிரியும் ஒப்புதல் வாக்குமூலம் கொடுக்கவில்லை என்றும், நானும் எந்த பொருளையும் கைப்பற்றவில்லை என்றும், நிலையத்திலேயே அமர்ந்து கொண்டு ஆவணங்களை தயாரித்திருக்கிறேன் என்றும் சொன்னால் சரியல்ல. இவ்வழக்கில் அ.சா.24 ஒரு கட்சிப் பதவியிலிருந்து எங்களை ஆதிக்கம் செய்தவர் என்பதால் அவர் கேட்டுக் கொண்டதற்கிணங்க அவரே இந்த சம்பவ தேதியன்று நடந்த தேர்தலின் வேட்பாளர் என்பதாலும், நான் மேம்போக்காக ஒருதலைபட்சமாக புலன் விசாரணை செய்துள்ளேன் என்றால் சரியல்ல.

Taken down before me in open court, in the presence of the Accused read over to the witness and admitted by the deponent to be correct

MUNISWAMI THANDAVAN
Digitally signed by MUNISWAMI THANDAVAN
Date: 2026.01.27 18:30:30 +0530

I Additional District& Sessions Judge,
Thoothukudi.